சுருக்கம்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை–113 – குளிர்சாதன வசதியுடன் கூடிய புதிய படப்பிடிப்புத் தளத்திற்கு கட்டணம் நிர்ணயம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி (தி.தொ. 1)த் துறை

அரசாணை (நிலை) எண். 334 நாள் 28.12.2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

மார்கழி 12.

படிக்கப்பட்டது:

முதல்வர்(பொ), எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை – 113 அவர்களின் கடிதம் எண். 2304/இ3/2006, நாள் 20.12.2010.

----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை தரமணி, எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தின் பணிகள் நிறைவடைந்து படப்பிடிப்புத் தளம் திறக்கப்பட உள்ளது என்றும், இப்படப்பிடிப்புத் தளத்தில் வசூலிக்கப்படவேண்டிய புதிய கட்டணத்தை நிர்ணயம் செய்யுமாறு முதல்வர்(பொ) எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் அவர்கள் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட குளிர்சாதன வசதி கொண்ட படப்பிடிப்பு தளத்தில் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கும்போது ஒரு கால்ஷீட் (8 மணி நேரம்) அளவில் கட்டணம் வசூலிக்கலாம். மேற்கொண்டு படப்பிடிப்பை நீட்டிக்க செய்யும்போது (Shooting Extension) ஒரு கால்ஷீட்டோ அல்லது அரை கால்ஷீட்டோ தொடரும் போது அதற்கான கட்டணத்தை சம்மந்தப்பட்ட படப்பிடிப்பு நிறுவனத்திடம் வசூலிக்கலாம் என்றும், இதனால் அரசுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என்றும், முன் வைப்புத் தொகை ரூ.5000/– வசூலிக்கலாம் என்றும் முதல்வர் (பொ), எம்.ஜி.ஆர்.அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. அந்நிறுவனத்தில் கால்ஷீட் கட்டணங்களை கண்காணிக்க வணிகக் கணக்கர் பணியிடம் ஒன்று உள்ளது என்றும், சுத்தம் செய்யும் பணிக்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள் முதல்வர் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்றும், அத்தொகை சுத்தம் செய்யும் பணியாளர்களுக்கு தினக்கூலி அடிப்படையில் சம்பளம் வழங்க முதல்வருக்கு அனுமதி அளிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர்(பொ) அவர்களின் கோரிக்கையினை ஏற்று, அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள குளிர்சாதன வசதிகொண்ட படப்பிடிப்பு தளத்திற்கு படப்பிடிப்பு நடத்த வரும் நிறுவனத்தாரிடம் முன்வைப்புத் தொகையாக ரூபாய் 10,000/– மற்றும் அட்டவணையில் உள்ளவாறு (வரிசை எண். 12,13,14,15 நீங்கலாக) கட்டணம் வசூலிக்கவும், ஒவ்வொரு ஆண்டு முடிவிலும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 5 சதவீதம் கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

**5.** குளிர்சாதன வசதிகொண்ட படப்பிடிப்பு தளத்திற்கு படப்பிடிப்பு நடத்த வரும் நிறுவனத்தாரிடம் பெறப்படும் முன்வைப்புத் தொகை, முதல்வர் வங்கிக் கணக்கில் செலுத்தவும், கால்ஷீட்டிற்காக வசூலிக்கப்படும் தொகை **0220.** Information and Publicity 102. Receipt from Departmentally Produced Films--AA Fees from Film and TV Institute of Tamilnadu. (D.P.C. No. 0220 01 102 AA 002) என்ற அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தவும், படப்பிடிப்பு முடிவடைந்த பின்னர் முன்வைப்புத் தொகையை அந்நிறுவனத்திற்கு திரும்ப வழங்குமாறும் முதல்வர் (பொ) அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

**6.** மேலே பத்தி 4 ல் அட்டவணையில் உள்ள காவல் நிலையம், நீதிமன்ற வளாகம் / சிறை, ஜப்பான் கார்டன் மற்றும் எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் சாலை பகுதிகள் (வரிசை எண். 12,13,14,15) ஆகியவற்றிற்கு தற்போது நடைமுறையில் உள்ளவாறு பிணைத்தொகை ரூ. 5,000/– மற்றும் அட்டவணையில் உள்ளவாறு கட்டணங்கள் வசூலித்துக்கொண்டு, இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்களால் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கவும் ஆணை வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

மூ. இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
முதல்வர் (பொ) எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை- 113.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.
<u>நகல்</u>
செயலாளரின் தனிச்செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை-9.
மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை–9.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (வரவு செலவு)த் துறை, சென்னை- 9.
இணை இயக்குநர் (நிர்வாகம்), செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9.
நிதி (து. வ.அ.நி (ம) செ / வ.செ.பொ I & II ) த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒம்/–

பிரிவு அலுவலர்.